[4th August 1966

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) மூன்றும் ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியைகளுக்கு வீடுகள் கட்டப்படுகின்றன. இப்பொழுது அவசர நிலைமையினால் பஞ்சாயத்து ஒன்றிப்பு ஆசிரியர்களுக்கு வீடுகள் கட்டும் திட்டம் இல்லை.

திரு. சோ. ஆறுமுகம் : ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் ஒன்றிரண்டு ஆசிரியர்களுக்கான விடுதிகள் தற்சமயம் கட்டப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனிலும் பத்து பதினைந்து ஆசிரியர்கள் விடுதிகளாவது கட்டுவதற்கு சர்க்கார் உத்தரவிடுமா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : பெண் ஆசிரியர்களுக்கு வீடு கட்டும் திட்டத்தைப்பற்றித்தான் குறிப்பிட்டேன். நான்காவது திட்டத்தில் ஒரு ப்ளாக்கிற்கு, திருப்தியான அளவிற்கு, சற்றேறக் குறைய பத்து வீடு அளவில் கட்டி முடிக்கக் கூடிய திட்டம் இருக்கிறது. அந்த அளவில்தான் 1966--67-ல் கிட்டத்தட்ட 75 க்வார்ட்டர்ஸ் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்பதைக் கனம் அங்கத்தினர்கள் அறிவார்கள்.

பெரியகோட்டை—மடப்புரம் சாலை

* 98 கேள்வி.—திரு. கரு. சீமைச்சாமி : கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இராமநாதபுரம் மாவட்டம், சிவகெங்கை தாலுகாவில் பெரியகோட்டையிலிருந்து, மடப்புரம் வரை சாலை அமைப்பது எந்நிலையில் உள்ளது ?

(இ) அதன் விபரம் என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) அவ்வாறான செயற்குறிப்பு எதுமில்லை

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Municipal Central bus stand at Tiruchirappalli

* 99 *Q.*—Sri M. KALYANASUNDARAM, Sri V. SANKARAN } Will the Hon. the Minister for Local Administration be pleased to state with reference to the answer given to question No. 481 on 31st March 1964—

(*a*) the present stage of the proposal to construct a Municipal Central bus stand at Tiruchirappalli; and

(*b*) when the proposal will be finalised ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : (அ) & (இ) திருச்சியில் மத்திய பேருந்து நிலையம் அமைக்க தேர்ந்தெடுக்கப்பட்ட ரெயில்வே நிலத்தின் மதிப்பு நிர்ணயிப்பது பற்றி மாவட்ட கலெக்டருக்கும், தென் பிராந்திய ரெயில்வே பொது மேலாளருக்கும் கடிதப் போக்குவரத்து நடந்து வருகிறது.

4th August 1966]

திரு. மீ. கலியாணசுந்தரம்: இவ்வளவு பெரிய நகரத்தில் இன்னும் ஒரு பஸ் ஸ்டாண்ட் வசதி கூட இல்லாமல் இருப்பது அங்குள்ள மக்களுக்குக் கஷ்டத்தை அளிக்கக் கூடியதாக இருக்கிற காரணத்தினால் நம் அமைச்சர் அவர்கள், அதுவும் ரெயில்வே அமைச்சர் அவர்களிடம் செல்வாக்குள்ள நமது முதல் அமைச்சர் அவர்கள், அவர்களது செல்வாக்கைப் பயன்படுத்தி அந்த நிலத்தைச் சீக்கிரம் முனிசிபாலிட்டிக்குக் கொடுக்க நடவடிக்கைகள் எடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கெனவே டிபன்ஸ் டிப்பார்ட்மெண்ட், ரெயில்வே டிப்பார்ட்மெண்டுக்கு அந்த நிலத்தை மாறுதல் செய்ய காலதாமதம் ஏற்பட்டதைக் கனம் அங்கத்தினர் அறிவார்கள். கடைசியாக விலைக்குத் தர ஒப்புக்கொண்டு விட்டார்கள். விலைக்குத் தருவதில் சதுர அடிக்கு ஒரு ரூபாய் என்று கலெக்டர் நிர்ணயித்தார்கள். அவர்கள் இரண்டு ரூபாய் கேட்கிறார்கள். அதில் சீக்கிரமாக முடிவு எடுக்கப்படும்.

திரு. மீ. கலியாணசுந்தரம்: விலையைப்பற்றி எப்படி வேண்டுமானாலும் நிர்ணயித்துக் கொள்ளலாம். இன்னொரு நாட்டுக்கு நாம் கொடுக்கவில்லை. ஒரு ரூபாயாக இருந்தாலும் சரி, இரண்டு ரூபாயாக இருந்தாலும் சரி, முதலில் நிலத்தை ஒப்படைத்து விடட்டும் முனிசிப்பாலிட்டியிடம். அப்புறம் விலையை எப்படி பைசல் செய்கிறார்களோ அதைப் பெற்றுக்கொள்ளட்டும். ஆகவே, அதற்கான நடவடிக்கைகளை துரிதமாக எடுப்பார்களா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: அங்கத்தினர் அவர்கள் கருத்தைக் கலெக்டரிடம் தெரியப்படுத்தி துரிதமாக நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான நிலம்

* 100 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி: கனம் தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) அரக்கோணம் நகரசபைக்குச் சொந்தமான சர்வே நெ. 180-ல் அமைந்துள்ள புறம்போக்கு நிலத்தை அரக்கோணம் நகரசபை மெம்பர் ஒருவர் சொந்தமாக்கிக் கொண்டது பற்றி 10—1—1966-ல் வடார்க்காடு மாவட்டக் கலெக்டருக்கு புகார் ஏதேனும் கொடுக்கப்பட்டதா ?

(இ) ஆமெனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) ஆம்.

(இ) இது குறித்து முடிவு செய்யப்படுகிற வரையில், இந்த நிலத்தில் மேலும் கட்டடங்கள் கட்டும் வேலையை நிறுத்திவைக்கும் படி, அரக்கோணம் நகரசபைக் கமிஷனருக்கு உத்தரவு பிறப்பித்திருப்பதாக வட ஆற்காடு மாவட்டக் கலெக்டர் தெரிவித்துள்ளார்.